**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அறந்தாங்கி**

**முன்னிலை: திருமதி.V.சிவகாமசுந்தரி.,பி.ஏ.,பி.எல்.,**

**மாவட்ட உரிமையியல் நீதிபதி, அறந்தாங்கி.**

2026 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 26-ம் நாள் வியாழன்கிழமை

(திருவள்ளுவர் ஆண்டு 2057-ம் ஆண்டு விசுவாவசு வருடம், பங்குனி மாதம் 12-ம் நாள்)

**அசல் வழக்கு எண். 114/2025**

**CNR.No.TNPD080001362025**

அன்புச்செல்வம் ........**வாதி**

//**எதிர்**//

1) செல்லத்துரை,

2) ஜோதி, ........**பிரதிவாதிகள்**

இந்த அசல் வழக்கானது இந்நீதிமன்றத்தில் கடந்த 18.03.2026-ம் தேதியன்று என் முன்பாக இறுதியாக விசாரணைக்கு வந்தபோது வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.பெ.செ.சிவராசு.,B.Com.,B.L., அவர்கள் முன்னிலையாகியும், பிரதிவாதிகளுக்கு பல வாய்ப்புகள் முன்னிடப்பட்டும் வக்காலத்து தாக்கல் செய்யாத காரணத்தினால் தோன்றா தரப்பினராக கருதப்பட்டும், வாதி தரப்பு வாதுரை மட்டும் கேட்கப்பட்டும், இந்த வழக்கு சம்பந்தப்பட்ட அனைத்து ஆவணங்களும் இந்த நீதிமன்றத்தில் நன்கு கவனமாக பரிசீலனை செய்யப்பட்டும், இந்நாள் வரையில் என் சீரான பரிசீலனையில் இருந்து இன்று இந்த நீதிமன்றம் வழங்கும்.

## தீர்ப்புரை

இந்த வழக்கானது வழக்கு சொத்துக்களில் வாதியின் அமைதியான அனுபவத்திலும், உடமையிலும் இதில் கண்ட பிரதிவாதிகளோ அல்லது அவரது ஆட்களோ எந்தவிதத்திலும் தடை, தகராறு, இடைஞ்சல் செய்யாதிருக்க நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கியும், வாதிக்கு பிரதிவாதிகளிடமிருந்து வழக்கின் செலவுத்தொகை வழங்கக்கோரியும், இதர பரிகாரங்கள் கோரியும் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

### 1. வழக்குரையின் சுருக்கம் :-

வழக்கு சொத்தானது புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி வட்டம், கொடிவயல் ஊராட்சியை சேர்ந்த மணிவிளான்வயல் கிராமத்தில் உள்ளது. வழக்கு சொத்து ஆதியில்

சுப்பிரமணியபுரம் திருவளர் செட்டியார் வகையறாவுக்கு வழிமுறை சொந்தமான சொத்தாக இருந்து வந்தது. மேற்படி திருவளர் செட்டியார் காலத்திற்கு பின்பு அவரின் மகன்கள் ஆத்மநாதன் -1. ராமலிங்கம் -2, முத்துவிஜயன் -3, ஆகியவர்கள் வாரிசு படி அடைந்து அனுபவம் செய்து வந்தனர். மேற்படி மூவரின் பாத்திய அனுபவத்தின் அடிப்படையில் பட்டாவும் ஏற்பட்டது. வழக்கு புலஎண் சொத்துக்களில் ஒரு பகுதியை மேற்படி திருவளர் செட்டியார் -1. ஆமுத்து ரெங்கன் செட்டியார்-2, ஆகியோரிடம் சின்னக்கருப்பன் மகன் சேவுகப்பெருமாள் அவர்கள் சுப்பிரமணியபுரம் சார்பதிவாளர் அலுவலக ஆவண எண். 100/1991 ன் படி 02.05.1991 ம் தேதியில் கிரையம் பெற்றுள்ளார். மேற்படி தேதிய கிரையத்தின் அடிப்படையில் 425 ம் எண் பட்டாவில் ஆதிபட்டாதாரருடன் சேவுகபெருமாள் பெயரும் கூட்டுப்பட்டாவில் சேர்க்கப்பட்டுள்ளது. இந்நிலையில் வாதி மேற்படி திருவளர் செட்டியார் மகன்கள் ஆத்மநாதன், ராமலிங்கம், முத்துவிஜயன் ஆகியோரிடம் சேவுகபெருமாள் 02.05.1991 ம் தேதியில் கிரையம் வாங்கிய சொத்துக்கள் நீங்கிய மற்ற சொத்துக்களை 30.05.2019 ம் நாள் சுப்பிரமணியபுரம் சார்பதிவாளர் அலுவலக ஆவண எண் 261/2019 ன் படி பிரியாத வீதத்தில் கிரையம் வாதி பெற்றிருந்தாலும் வழக்கு சொத்துக்களை வாதி கிரையம் பெற்ற பரப்புக்களை தனியாக அனுபவம் அயைலும் செய்து வருகின்றார். வாதி 30.05.2019-ம் தேதிய கிரைய ஆவணத்தின் அடிப்படையில் வாதிக்கு கிரையம் கொடுத்த ஆதிபட்டாதாரர்களான ஆத்மநாதன் -1, ராமலிங்கம் -2, முத்துவிஜயன் 3, ஆகியோர் பெயரை கூட்டுப்பட்டாவில் இருந்து நீக்கிவிட்டு 425-ம் எண் பட்டாவில் வாதியின் பெயரை கூட்டுப்பட்டாவில் சேர்க்க வருவாய் துறையில் மனுக்கொடுத்து அதுவும் நிலுவையில் இருந்த வந்தது. இந்நிலையில் மேற்படி சேவுகப்பெருமாள் அவர்கள் இறந்துவிட்டார்கள். அவருக்கு அவரது மனைவியான பொன்னம்மாள் மட்டுமே வாரிசாவார். மேற்படி பொன்னம்மாள் அவர்கள் வாதிக்கு வேண்டாத நபர்களின் தூண்டுதலின் பேரில் வழக்கு புலஎண் சொத்துக்களில் கூட்டு பட்டாவில் வாதி பெயர் இல்லாததால் வாதியின் உரிமையை மறுத்து வழக்கு சொத்துக்களில் வாதியை அனுபவம் செய்யவிடப்போவதில்லை என்று வெளிப்படையாக பேசி பிரச்சனை செய்து வந்தார். அதனால் மாண்பமை அறந்தாங்கி சார்பு நீதிமன்றத்தில் மேற்படி பொன்னம்மாள் அவர்களுக்கு எதிராக O.S 41/2021 என்ற நம்பரில் வழக்கு சொத்துக்களையும் பொறுத்து உரிமைவிளம்பல் மற்றும் நிரந்தர தடையாணை பரிகாரம் கோரி வாதியால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. மேற்படி வழக்கும் கடந்த 26.09.2022-ம் நாள் அன்று வாதிக்கு சாதகமாக உரிமைவிளம்பல் மற்றும் நிரந்தர தடையாணை பரிகாரம் வழங்கி மாண்பமை அறந்தாங்கி சார்பு நீதிமன்றத்தால் தீர்ப்பு பகரப்பட்டுள்ளது. அதன்பின் வழக்கு சொத்தை வாதி எந்தவித இடையூறும் இல்லாமல் அனுபவம் செய்து வருகிறார். மேற்படி தீர்ப்பின் அடிப்படையிலும் வாதியின்

அடிப்படையிலும் வழக்கு உரிமை மற்றும் அனுபவத்தின் சொத்துக்களுக்கான வாதியின் பெயரில் பட்டாவும் ஏற்பட்டுள்ளது. மேற்படி O.S.41/2021 வழக்கின் பிரதிவாதியான பொன்னம்மாள் அவர்கள் ஆறு மாதங்களுக்கு முன்பு இறந்துவிட்டார். இந்நிலையில் 19.09.2025 ம் தேதியில் மேற்படி பொன்னம்மாளின் வாரிசுகள் என்று சொல்லிக்கொண்டு பிரதிவாதிகள் வாதியின் அனுபவத்தை தடுக்கப்போவதாக கிராமத்தில் வெளிப்படையாக மேற்படி தேதி முதல் சொல்லி வருகிறார்கள். வழக்கு சொத்துக்களின் மீது இந்த பிரதிவாதிகளுக்கு எவ்வித உரிமையும் அனுபவமும் எந்தக்காலத்திலும் இருந்தது இல்லை. எனவே இந்த வழக்கானது வழக்கு சொத்தில் வாதியின் அமைதியான அனுபவத்தை பிரதிவாதிகளோ, அவர்வகை ஆட்களோ எவ்வகையிலும் தடை தகராறு செய்யக்கூடாது என்று நிரந்தர தடையாணை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் :-**

இந்த வழக்கில் வாதி தன்னை வா.சா.1-ஆக விசாரித்துக்கொண்டு, வா.சா.1-ன் மூலம் வா.சா.ஆ.1 முதல் 5 ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. ஒரு சக்திவேல், த/பெ. சின்னச்சாமி என்பவர் வா.சா.2 ஆக விசாரிக்கப்பட்டு வா.சா.2-ன் மூலம் ஆவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

வா.சா.ஆ.1 என்பது 30.05.2019-ம் தேதிய வாதி கிரையம் வாங்கிய ஆவணத்தின் அசல் வழக்கு எண். 41/2021 வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் அதன் பதிவிறக்க நகல் ஆகும். வா.சா.ஆ.2 என்பது அறந்தாங்கி சார்பு நீதிமன்ற அசல் வழக்கு எண். 41/2021 வழக்கின் தீர்ப்புரை சான்றிட்ட நகல் ஆகும். வா.சா.ஆ.3 என்பது மேற்படி வழக்கில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணை நகல் ஆகும். வா.சா.ஆ.4 என்பது 15.09.2025-ம் தேதிய வழக்கு சொத்துக்களுக்கான பட்டா எண்.445 படியான கணினி சிட்டா கணினி பதிவிறக்க நகல் ஆகும். வா.சா.ஆ.5 என்பது 15.09.2025-ம் தேதிய 18.01.2008 முதல் 14.09.2025 காலக்கட்டத்திற்குரிய வில்லங்க சான்று கணினி நகல் ஆகும்.

**3. வாதுரை :-**

வாதி தரப்பில் வா.சா.1 மற்றும் வா.சா.2 சாட்சிகளின் மூலமும், வா.சா.ஆ.1 முதல் 5 வரையிலான சான்றாவணங்களின் மூலம் வழக்கு நிரூபிக்கப்பட்டுள்ளதாகவும், வாதி தரப்பு வழக்கை எதிர்த்து பிரதிவாதிகள் தரப்பில் இந்நீதிமன்றத்தில் கட்சி செய்யவில்லை எனவும், எனவே தாவாப்படி தீர்ப்பாக வேண்டும் எனவும் வாதிடப்பட்டது.

**4. எனவே இவ்வழக்கில் தீர்மானிக்கப்படவேண்டிய விஷயம் என்னவெனில் வாதி கோரிய பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கதா? என்பதே ஆகும்.**

இந்த வழக்கானது வாதியால் பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தரதடையாணை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த வழக்கில் பிரதிவாதிகள் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாததால் தோன்றா தரப்பினராக கருதப்பட்டுள்ளார்கள்.

வாதி தனது வழக்கை நிரூபிக்க வாதி தன்னை வா.சா.1 ஆக விசாரித்துக்கொண்டு வா.சா.1 மூலம் வா.சா.ஆ.1 முதல் 5 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

வாதி கிரையம் வாங்கிய கிரைய ஆவணத்தின் பதிவிறக்க நகல் வா.சா.ஆ.1 ஆகவும், வாதியால் பொன்னம்மாள் என்பவருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட அசல் வழக்கு எண்.41/2021 வழக்கில் ஏற்பட்ட தீர்ப்பாணை சான்றிட்ட நகல் வா.சா.ஆ.2 ஆகவும், மேற்படி வழக்கில் ஏற்பட்ட தீர்ப்புரை சான்றிட்ட நகல் வா.சா.ஆ.3 ஆகவும், வழக்கு சொத்துக்களுக்கான கூட்டுப்பட்டா கணினி சிட்டா சான்றிட்ட நகல் வா.சா.ஆ.4 ஆகவும், வில்லங்கசான்று வா.சா.ஆ.5 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

மேலும், வாதியின் வழக்கை அனுசரித்து வா.சா.2 ஆக சக்திவேல் என்பவர் சாட்சியம் அளித்துள்ளார். வாதி தரப்பில் கிரைய ஆவணம் வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளதாலும், வா.சா.ஆ.2 மற்றும் 3 சார்பு நீதிமன்ற அசல் வழக்கு எண். 41/2021 வழக்கில் ஏற்பட்ட தீர்ப்பின் படி வழக்கு சொத்து பொறுத்து வாதிக்கு உரிமைவிளம்பல் பரிகாரம் வழங்கப்பட்டுள்ளதால் வழக்கு சொத்தை பொறுத்து வாதி தனது சட்டப்பூர்வமான சுவாதீனத்தை நிரூபித்துள்ளதாலும், வாதியின் வழக்கை எதிர்த்து பிரதிவாதிகளால் கட்சி செய்யப்படாததாலும், தாவா வழக்கில் வாதி கோரியுள்ள நிரந்தரதடையாணை பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கது என இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

முடிவாக இவ்வழக்கு செலவுத்தொகையுடன் அனுமதிக்கப்பட்டு வழக்கு சொத்துக்களில் வாதியின் அமைதியான அனுபவத்திலும், உடமையிலும் இதில் கண்ட பிரதிவாதிகளோ அல்லது அவரது ஆட்களோ எந்தவிதத்திலும் தடை, தகராறு, இடைஞ்சல் செய்யாதபடிக்கு நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கி உத்தரவிடப்படுகிறது.

SIVAGAMASUNDARY V
Digitally signed by SIVAGAMASUNDARY V
Date: 2026.03.26 21:12:43 +0530

இந்தத் தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு பின் அவரால் நேரடியாக கணினி சாதனத்தில் பதிவு செய்யப்பட்டு பின் என்னால் பிழைகள் திருத்தம் செய்யப்பட்ட பின்னர் இன்று 2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 26-ம் நாள் என்னால் கையொப்பம் செய்யப்பட்டு திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

**ஒம்/-V.சிவகாமசுந்தரி,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**அறந்தாங்கி.**

**சாட்சி மற்றும் சான்றாவணப் பட்டியல் :-**

**வாதி தரப்பு சாட்சிகள் :-**

1) வா.சா.1 – அன்புச்செல்வம் (வாதி)

2) வா.சா.2 - சக்திவேல்

**வாதி தரப்பு சான்றாவணங்கள் :-**

| ஆவண எண் | தேதி | ஆவணம் | ஆவணத்தின் தன்மை |
|---|---|---|---|
| வா.சா.ஆ.1 | 30.05.2019 | வாதி கிரையம் வாங்கிய ஆவணம் | பதிவிறக்க நகல் |
| வா.சா.ஆ.2 | --- | அறந்தாங்கி சார்பு நீதிமன்ற அசல் வழக்கு எண். 41/2021 வழக்கின் தீர்ப்புரை | சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.3 | --- | மேற்படி வழக்கில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணை | நகல் |
| வா.சா.ஆ.4 | 15.09.2025 | வழக்கு சொத்துக்களுக்கான பட்டா எண்.445 படியான கணினி சிட்டா கணினி | பதிவிறக்க நகல் |
| வா.சா.ஆ.5 | 15.09.2025, 18.01.2008 முதல் 14.09.2025 | காலக்கட்டத்திற்குரிய வில்லங்க சான்று | கணினி நகல் |

**சாட்சி மற்றும் சான்றாவணங்கள் :-** இல்லை

SIVAGAMASUNDARY V

Digitally signed by SIVAGAMASUNDARY V
Date: 2026.03.26 21:12:15 +0530

**<u>பிரதிவாதி தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்</u>** :- இல்லை.

**<u>நீதிமன்ற சாட்சி மற்றும் சான்றாவணங்கள்</u>** :- இல்லை.

**//உண்மை நகல்//**

SIVAGAMASUNDARY V

Digitally signed by SIVAGAMASUNDARY V
Date: 2026.03.26 21:12:06 +0530

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**அறந்தாங்கி.**

**வரைவு/செவ்வை தீர்ப்புரை**

**அசல் வழக்கு எண். 114/2025**

**நாள்.26.03.2026**

**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,**

**அறந்தாங்கி.**